**விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் - 2018**

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது திட்டத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமாக நிருவகித்தல் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திட்டதின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக திட்டம் தொடர்ந்து நிலைத்திருத்தல் தொடர்பாக போதியளவான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள

ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும் எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் திட்டத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது திட்டத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டு நியமங்களுடனான இனக்கமின்மைகள்

| இனக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட ரூபா 2,102,060 கிரயமான மோட்டார் வாகனம் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தும் நியமம் 08 இன் பிரகாரம் அந்த வாகனத்தின் | சபையின் மோட்டார் வாகனத்தை மீள் மதிப்புச் செய்தல் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அடுத்து வரும் ஆண்டின் போது உரிய | முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களை நியமத்தின் பிரகாரம் மீள்மதிப்புச் செய்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வருவதற்கு |

| | | |
|---|---|---|
| விளைதரும் ஆயுட் காலத்தை கவனத்தில் கொண்டு மீள் மதிப்புச் செய்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செம்மையாக்கலை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) நியமம் 20 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் 1989 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 547,885 தொகையான மூலதன மானியம் உரிய சொத்துக்களின் விளைதிறன் ஆயுட் காலத்தினுள் சமமான அடிப்படையில் வருமானத்திற்கு காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் மூலம் வழங்கப்பட்ட நிதி உதவியான இப்பணத்தை அடுத்துவரும் ஆண்டின் போது காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நியமத்தின் பிரகாரம் சொத்துக்களின் விளைதரும் ஆயுட் காலத்தின் முறையான அடிப்படையில் வருமானத்திற்கு காலக்கழிவு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) நியமம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்படுகின்ற பங்களிப்பாளர்களின் மற்றும் விவசாய ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியப் பொறுப்பிற்காக காலக் கணிப்பு மதிப்பீடானது காலரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதியப் பொறுப்பு அவ்வாறான காலக்கணிப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்படாது ரூபா 66,508,205,596 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2007 ஆம் ஆண்டின் போது விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின் பொறுப்புக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட காலக் கணிப்பு மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியப் பொறுப்பு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஓய்வூதியத் திட்டம் சுய நிதியினை அடிப்படையாகக் கொண்டதல்லாததனால் எதிர்காலத்தில் இத்திட்டத்தினை மிளமைப்புச் செய்து உரிய முறைப்படி பொறுப்புக்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஓய்வூதியப் பொறுப்பிற்கான காலக் கணிப்பு மதிப்பீடானது கால ரீதியாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 1.5.2 திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 2014 மார்ச் 14 ஆந் திகதிய 1853/49 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டமானது அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விவசாயிகளுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தும் பங்களிப்பு பணத்தை அறவீடு செய்தல் அதற்கிணங்க இடம் பெற்றிருக்காமையின் காரமாக 2017 மற்றும் 2018 ஆம் | 1853/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஓய்வூதியத் திட்டத்தினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் சுய நிதியினை அடிப்படையாகக் கொண்டு பேணக்கூடிய புதிய ஒரு ஓய்வூதியத் திட்டம் அதன் மூலம் இனங்காணப்பட்டுள்ளது. விவசாயிகள் ஓய்வீதியம் பூச்சியமாக இருந்தும் ஓய்வூதியத்தை கொடுப்பனவு செய்வதற்காக திறைசேரியின் நிதி | திறைசேரியின் பங்களிப்பு இல்லாது சுய நிதி அடிப்படையில் பேணக்கூடிய புதிய விவசாயிகள் ஊய்வூதியத் திட்டத்தை தயாரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| ஆண்டுகளின் போது விவசாயிகளின் பங்களிப்பு முறையே ரூபா 29,381,645 மற்றும் ரூபா 24,552,961 ஆக இருந்ததுடன் ஓய்வீதியக் கொடுப்பனவுகள் முறையே ரூபா 2,616,581,105 மற்றும் ரூபா 3,059,370,767 ஆக இருந்தன. ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அதிகரித்ததன் காரணமாக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 2,520,000,000 மற்றும் 2,725,000,000 திறைசேரியின் பங்களிப்பு இல்லாது திட்டத்தை செயற்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. | ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உருவாகியுள்ள ஓய்வீதியப் பொறுப்புக்கு ஒத்ததாக நிதியத்தை கட்டியெழுப்புவதற்காக திறைசேரிக்கு தற்பொழுது தேவையான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|---|
| 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்ட அதிகாரச் சட்டம் | | | |
| 15(2), (3) ஆம் பிரிவு | யாராவது ஒரு பங்களிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ள சான்றிதழின் கீழ் நலன்கள் இழக்கப்படும் சந்தர்ப்பத்தில் அது பற்றிய அறிவித்தினை அப்பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். அவ்வேளையில் தமது சான்றிதழினை செல்லுபடியாக்கி கொள்வதற்காக சபைக்கு மேன்முறையீடு செய்யும் உரிமை பங்களிப்பாளருக்கு இருக்க வேண்டியதுடன் பங்களிப்பாளருக்கு அவ்வாறு தெரியப்படுத்தாமையின் காரணமாக செல்லுபடியற்றதாக்கப்பட்ட சான்றிதழை மீண்டும் | விவசாயிகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்துள்ள பங்களிப்பாளர்கள் தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் அவர்களின் பங்களிப்பு இரத்துச் செய்யப்படுவதுடன் அது தொடர்பாக தேவையான தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு பங்களிப்பை முடிவுறத்திய விவசாயிகளின் செலுத்திய தவணைப் பணங்களை அவர்களின் 60 வயது பூர்த்தியடைந்த சந்தர்ப்பத்தில் மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை | நலன்கள் இழக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அது பற்றிய அறிவித்தலை அப்பங்களிப்பாளருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செல்லுபடியாக்குவதற்கு ஒரு பங்களிப்பாளருக்கு உள்ள சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்படுகின்றது. | |
| 20 ஆம் பிரிவு | திட்டத்தின் ஆலோசனைக்குழு 12 அங்கத்தவர்களை உள்ளடக்கியிருக்க வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டிற்காக ஒன்பது அங்கத்தவர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்ததுடன் எதுவித கூட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வெற்றிடமாக உள்ள ஆலோசனைக் குழு அங்கத்தவர்கள் அனைவரும் நியமிக்கப்பட்ட பின்னர் கூட்டங்களை நடாத்துதலையும் உரிய முறையில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | அங்கத்தவர்களை நியமித்து உரிய முறையில் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| 4 ஆம் பிரிவு | விவசாயிகள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாது நிரந்தரமாக, அரைகுறையாக பலவீனமடைகையில் அல்லது முழுமையாகப் பலவீனமடைகையில் பொருளாதாரரீதியாக ஏதாவது சலுகையளிப்பதற்கு படிகளைச் செலுத்துதல், மரணத்தின் போது மரணப் பணிக்கொடையைச் செலுத்துதல், மற்றும் 60 வயதினைப் பூர்த்தியடைகையில் காலப்பகுதியின் பிரகாரம் ஓய்வூதியங்களைச் செலுத்துதலே குறிக்கோளாகும். எவ்வாறாயினும், 2012 ஆம் ஆண்டின் பின்னர் அங்கத்தவர்களை திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 மார்ச் 14 ஆந் திகதிய 1853/49 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஓய்வூதியங்கள் செலுத்தப்பட்டிருந்தும் இத்திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய தவணைப் பணம் அதிக பெறுமதியைக் கொண்டிருந்ததனால் புதிய ஓய்வூதியத் திட்டத்தினை அறிமுகப்படுத்துமாறு சபைக்கு ஆலோசனை கிடைத்துள்ளது. அதற்கிணங்க புதிய அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரம் ஓய்வூதியத் திட்டத்தினை மீளளிப்புச் செய்து புதிய ஆட்சேர்ப்புக்கள் மற்றும் தவணைப் பண அறவீடு செய்யும் புதிய நடைமுறையினைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | ஓய்வூதியத் திட்டத்தின் குறிக்கோள்களின் பிரகாரம் அங்கத்தவர்களை தொடர்ச்சியாக சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| 6(1) ஆம் பிரிவு | 60 வயதைப் பூர்த்தியடைந்த திகதியிலிருந்து ஓய்வூதியம் செலுத்த வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ஓய்வூதியம் தயாரிக்கப்பட்ட திகதியிலிருந்து | எதிர்காலத்தில் எதுவித நிலுவைப் பணமும் ஏற்படாத வகையில் ஓய்வூதியத்திற்கு தகைமை பெறுகின்ற சந்தர்ப்பத்திலேயே ஓய்வூதியப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு | நிலுவைகள் ஏற்படாத வகையில் 60 வயதைப் பூர்த்தியடைந்த திகதியிலிருந்து ஓய்வூதியத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| செலுத்துதல் இடம் பெற்றிருந்தது. 2017 ஏப்ரல் மாதத்திலிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 19,283 விவசாயிகளுக்கான ஓய்வூதிய நிலுவைப் பணம் ரூபா 451,324,111 மொத்த தொகையாக இருந்ததுடன் அது செலுத்தபட்டிருக்கவில்லை. அதேபோல் 2012 – 2013 காலப்பகுதி தொடர்பாக 90,573 விவசாயிகளுக்குத் தகமையுள்ள நிலுவையான ஓய்வூதியமாகிய ரூபா 3,033,329,200 பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலுவைப் பணத்தை திறைசேரி நிதி ஏற்பாட்டின் பிரகாரம் எதிர்காலத்தில் ஒழுங்குமுறையாகச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அப் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ளப்படும். | வேண்டும். |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 03 வங்கி கணக்குகள் தொடர்பாக 1992 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் வைப்புச் செய்யப்பட்ட ஆனால் தேறப்படாத ரூபா 1,179,624 பெறுமதியான 117 காசோலைகள் சம்பந்தமாக விடயத்தை ஆராய்ந்து பார்த்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இம் மீதிகள் 15-25 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பழைய மீதியாக உள்ளதுடன் 2003 ஆம் ஆண்டின் போது இது தொடர்பாக தேடிப் பார்த்து சரிசெய்யக்கூடிய அனைத்து மீதிகளையும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு தேடிக் கண்டு பிடிக்க முடியாத மீதிகளே இவ்வாறு முன்கொண்டு வரப்பட்டுள்ளது. இந்நிலைமையானது பெரும்பாலும் ஒரு காசோலைக்கு இரண்டு தடவைகள் பற்றுச்சீட்டுக்கள் வழங்கியமையே காரணமாக இருந்தது. இது தொடர்பாக அடிக்கடி கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் போதும் திறைசேரியில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதும் விளக்கமளிக்கப்பட்டதன் பின்னர் திறைசேரியின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | ஒரே காசோலைக்கு இரண்டு பற்றுச்சீட்டுக்கள் விநியோகிப்பது சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.8 தகவல் தொழில்நுட்ப (II) பொது கட்டுப்பாட்டு முறைமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 2012 ஆம் ஆண்டின் இறுதியளவில் திட்டத்தின் செயற்படுகின்ற விவசாயிகளின் எண்ணிக்கை 959,254 ஆக இருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் பின்னர் பங்களிப்பாளர்கள் தொடர்பான தகவல்களை நாளது வரையாகப் பேண முடியாததன் காரணமாக செயற்படுகின்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை, வருடாந்தம் சேகரிக்கப்பட வேண்டிய பங்களிப்பு, செலுத்த வேண்டிய சரியான ஓய்வூதியத்தின் பெறுமதி எவ்வளவு என்பவற்றை கணித்துக்கொள்ள முடியாதிருந்தது. | பங்களிப்பாளர்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் கணனி மயப்படுத்தி கணனி முறைமையை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | தகவல் முறைமையை நாளது வரையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 312,010,448 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 42,640,061 ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 269,370,387 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. வீழ்ச்சிக்கு ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அதிகரித்தமை பிரதானமாக காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 2014 ஆம் ஆண்டிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்ட புதிய ஓய்வூதியத் திட்டத்தின் விவசாய பங்களிப்பாளர்களின் ஆயுள் தரவு தகவல்களை உள்ளடக்கி முறைமையினை நாளது வரையாக்குவதற்கு விவசாயிகளின் தகவல்களை மீளாய்வு செய்வதற்காக பங்குபற்றிய விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களுக்கு ஊக்குவிப்பு படிகளைச் செலுத்துதல், அச்சிடல் செலவுகள் மற்றும் விளம்பரத்திற்காக ரூபா 1,726,875 செலவு செய்யப்பட்டிருந்தும் முறைமை | விவசாயிகளின் ஓய்வூதியத்திட்டத்தின் பங்களிப்பை நாளது வரையாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் போது தகவல்களைச் சமர்ப்பித்திருந்த விவசாயிகளின் எண்ணிக்கை குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை மாவட்ட மட்டத்தில் கணனிமயப்படுத்தி நாளது வரையாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. | விவசாயி பங்களிப்பாளர்களின் ஆயுள் தரவுத் தகவல்களை உள்ளடக்கிய முறைமையை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இதுவரை நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | சபை எதிர்பார்த்தவாறு விவசாயிகளின் மீளாய்விற்கு உரிய முறையில் தகவல்களை சமர்ப்பிக்காததன் காரணமாக உரிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் இத்தகவல்களை நாளது வரையாக்குவதற்காக பொருத்தமான நடைமுறையைப் பின்பற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

---

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | | |
| (அ) 1981 ஆம் ஆண்டிலிருந்து விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்திற்குரிய கோவைகள் அதிக அளவானவையாக இருந்ததுடன் அவற்றில் பல உக்கிப் போய் இருந்ததன் காரணமாக விவசாயிகளின் ஓய்வூதிய முகாமைத்துவ நடைமுறையின் மூலம் (Document Management System) பாதுகாத்தல். | தற்பொழுது புதிய கணணி முறைமையினை கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கிறேன். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு விவசாயிகளைச் சேர்த்துக்கொள்ளல். | புதிய விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் தயாரிக்கப்பட்டு நிபுணர்கள் குழுவிற்கு அனுப்பி வைத்து ஆலோசனைகளின் பிரகாரம் மீளமைப்புச் செய்து புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | - மேற்படி - |